
ஸ்ரீ ஆமருவியப்பன் திருக்கோயில் வரலாறு.



வெளியிட்டது :

ஸ்ரீ ஆமருவியப்பன் தேவஸ்தானம்

தேரழுந்தூர்

(தஞ்சை மாவட்டம்)

133

ஸ்ரீ ஆமருவியப்பன்
திருக்கோயில் வரலாறு

எழுதித் தயாரித்தவர் :
பேராசிரியர். கே. எஸ். நாகராஜன், எம். ஏ.


தேரழுந்தூர்
ஸ்ரீ ஆமருவியப்பன் தேவஸ்தானம் வெளியீடு
1965

பதிப்புரை

பஞ்ச கிருஷ்ண க்ஷேத்திரங்களில் ஒன்ருன தேரழுந்தூர் ஸ்ரீ ஆமருவியப்பன் திருக்கோயிலின் வரலாறும் விபரங்களும் அடங்கிய ஒரு சிறு நூலை வெளியிட வேண்டும் என்று சில ஆண்டுகளாகவே எண்ணி வந்தோம். அந்த நற்காரியம் இப்போது நடைபெறுவது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேம். வெளியூர்களிலிருந்து வரும் அன்பர்கள் இத்தகைய நூலை விரும்பிக் கேட்கிருர்கள். கோயிலைப் பற்றிய புராண, இலக்கியக் குறிப்புக்களையும், கோயிலுக்குள் காணவேண்டிய இடங்களையும் திருந்திய முறையில் அவர்களுக்குத் தெரிவித்துவிட்டால், கோயிலை அவர்கள் நன்ருக, முழுமையாக, விபரமாகக் கண்டு களிக்க முடியும். இவ்வுயரிய கருத்தோடு நூலை வெளியிடத் திட்டமிட்டபோது அதை எழுதுவதற்குத் தகுந்த ஒருவரைத் தேடினேம். **மாயூரம் ஏ. வி. சி. கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர், திரு. கே. எஸ். நாகராஜன் அவர்கள்** இப்பணியை மனமுவந்து ஏற்றுக்கொண்டார் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிப் புலமை உடையவரும், பல சிறந்த தமிழ் நூல்களை எழுதிப் பாராட்டுப் பெற்றவருமான இம்மெய்யன்பர் செய்துள்ள உதவிக்கு நாங்கள் மிகவும் கடப்பாடுடையோம். சாதாரணமாக இத்தகைய தலவரலாறுகளில் இடம்பெருத பல புதிய அம்சங்கள் இதில் காணப்படுகின்றன. கம்பனைப் பற்றிய சிறப்புப் பகுதி ஒன்று அமைந்துள்ளது. நல்ல தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ள இச்சிறுநூல் எல்லோருக்கும் பயனளிக்கும் என்று நம்புகிறேம்.

இங்ஙனம்,
தருமகர்த்தாக்கள்.

தேரழுந்தூர்,
18—3—1965.



செங்கமலத் திருமகளும் புவியும் உடனுறைய

அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே!

ஸ்ரீ ஆமருவியப்பன் திருக்கோயில் வரலாறு

ஊரின் அமைப்பு

தேரழுந்தூர் என்னும் இப்புனிதத்தலம் மாயூரத்தில் இருந்து சுமார் எட்டு மைல் தொலைவில் இருக்கிறது மாயூரத்திலிருந்து கும்பகோணம் நோக்கி இரயிலில் சென்றால் இரண்டாவது நிலையம் தேரழுந்தூர். இரயில் நிலையத்திலேயே "கம்பன் பிறந்த இடத்திற்குப் போக இங்கே இறங்கவும்" என்று ஒரு பலகை காணப்படும். அங்கிருந்து தெற்குநோக்கி இரண்டுமைல் சென்றால் ஊரை அடையலாம். மாயூரத்திலிருந்து அடிக்கடி பஸ்களும் செல்லுகின்றன. கோமல் செல்லும் பஸ்ஸில் ஏறினால் அரை மணி நேரத்துக்குள் தேரழுந்தூரை அடையலாம்.

ஊருக்கு வடக்கே ஒரு மைல் தொலைவில் மஞ்சளாறும் அதற்கு வடக்கே காவிரியாறும் ஓடுகின்றன. தெற்கே அரை மைல் தொலைவில் மகிமாலையாறு ஓடுகிறது. இதற்குக் கடலாழி என்றும் பெயருண்டு. நீர் வளமும், நில வளமும் நிறைந்து இலங்குவது இவ்வூர்.

சங்ககாலந்தொட்டு இவ்வூர் பெருமையுடன் விளங்கிற்று என்பதற்கு இலக்கியச்சான்றுகள் பற்பல வுள்ளன. இதை நான்கு வட்டங்கள் அல்லது பகுதிகளாகப் பிரித்து மக்கள் பேசுவர். அவையாவன தொழுதாலங்குடி, கீழையூர், மேலையூர், பெருமாள்கோயில் வட்டங்கள். இவ்வூரின் மக்கள் தொகை சுமார் 8500 ஆகும்.

ஊர்ப் பெயர்கள்

இவ்வூருக்குக் கிருஷ்ணாரண்யம், அழுந்தூர்(அழுந்தை) திருவழுந்தூர், தேரழுந்தூர் ஆகிய பல பெயர்கள் உள்ளன.

திருமால் கண்ணனும் வந்து நிலைபெற்ற காட்டுப்பகுதி யாதலால் கிருஷ்ணாரண்யம் என்ற பெயரும், உபரிசரவசு என்னும் அரசனுடைய தேர் அழுந்தப் பெற்றமையால் (திரு)அழுந்தூர் அல்லது தேரழுந்தூர் என்ற பெயரும் தோன்றலாயின.

புராணக் குறிப்புக்கள்

(1) தேவலோகத்தில் அரசுபுரியும் தேவேந்திரன் ஒரு சமயம் கருடாழ்வாரை அழைத்தான். ஒரு வைர முடியையும் ஒரு விமானத்தையும் அவரிடம் தந்து, அவை எந்தெந்த பெருமாளுக்கு உகந்தவையோ அவ்வவரிடம் சமர்ப்பித்து விடுமாறு வேண்டுகோள் விடுத்தான். கருடாழ்வாரும் அவ்வாறு செய்ய ஒப்புக்கொண்டார். இரு பெரு நிதியங்களை யும் எடுத்துக்கொண்டு புறப்பட்டார். எவரிடம் அவற்றைச் சேர்ப்பது என்று சிந்தித்துப் பிறகு மைசூர் ராஜ்யத்திலுள்ள திருநாராயணபுரத்தில் கோயில் கொண்டுள்ள செல்லப் பிள்ளைப் பெருமாளுக்கு வைர முடியையும், தேரழுந்தூரில் கோயில் கொண்டுள்ள தேவாதிராஜனுக்கு விமானத்தையும் சமர்ப்பிப்பது என்று முடிவு செய்தார். அதன்படி தேரழுந்தூர்ப் பெருமாள் இந்திர விமானத்தை ஏற்றுக் கொண்டார்; மனம் மிக மகிழ்ந்து கருடாழ்வாரைத் தன் பக்கத்திலேயே இருத்திக்கொண்டார்.

(2) கிருஷ்ண க்ஷேத்திரங்கள் என்று ஐந்து தலங் களைச் சிறப்பித்துக் கூறுவர் பெரியோர். அவற்றுள் தேரழுந்தூர் ஒன்றாகும். நந்த கோகுலத்தில் கண்ணன் தன்தோழர்களுடன் பசுக்களை மேய்த்துக்கொண்டிருந்தான். தாகம் ஏற்படவே பசுக்களை ஓரிடத்தில் நிறுத்திவிட்டு யமுனை நதிக்குச் சென்றான். கண்ணன் அப்புறம் சென்றதும் பிரும்மா அங்கு நின்ற பசுக்கூட்டத்தைத் தேரழுந்தூருக்கு ஓட்டிவந்து மறித்து வைத்தார். நீர் குடித்துத் திரும்பிய கண்ணன் பசுக்களைக் காணோமே என்று எண்ணினான்.

அவனுடைய தோழர்களும் மற்றும் இருந்த இடையரும் மனம் மிக நொந்தனர். கணப் பொழுதில் நடந்ததை அறிந்தான் கண்ணன். (எல்லாம் அவனுடைய திருவிளையாட்டுத் தானே!) உடனே புதிதாக ஒரு பசுக் கூட்டத்தைத் தோற்றுவித்தான். இழந்த பசுக்களைப் போலவே புதுப்பசுக்கள் இருந்தன. இழந்த கன்றுகளைப் போலவே புதிய கன்றுகள் இருந்தன. எல்லோரும் மகிழ்ந் தனர். ஆனால் பிரும்மா ஏமாற்றம் அடைந்தார். ஆநிரையைத் தேடித் தேரழுந்தூர் வருவான் கண்ணன் என்று காத்திருந்த அவர் தன் பிழையைச் சொல்லி கண்ண னிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். தேரழுந்தூருக்கு வந்து கோயில் கொண்டருள வேண்டுமென்ற அவ்விண்ணப் பத்தைக் கண்ணன் ஏற்றுக்கொண்டான். “ஆமருவி நிரை மேய்க்கும் அமரர் கோமானாக” வந்து அமர்ந்தான். இதற்குச் சான்றாக உற்சவருக்குப் பின்னால் பசு ஒன்றும் முன்னால் கன்று ஒன்றும் நின்று கொண்டிருப்பதைக் கோயிலில் காணலாம்.

3. உபரிசரவசு என்ற அரசன் ஒரு நாள் தன் மனைவி யுடன் புஷ்பக விமானத்தில் ஏறிச் சென்று கொண்டிருந் தான். அவ்விமானம் தேரழுந்தூருக்கு மேலே வந்ததும் அப்பெருமாட்டி “கீழே இறங்கி தேவாதிராஜனை வணங்கிச் செல்வோம்” என்றனள். ஆனால், அரசன் அதற்கு ஒருப்படவில்லை. “என்னைவிட அவன் பெரிய ராஜனோ?” என்று அகம்பாவத்துடன் கூறி விமானத்தைச் செலுத்தும் படி உத்தரவிட்டான். இதை உணர்ந்த தேவாதிராஜன் அரசனுடைய மமதையை அடக்கத் திருவுள்ளம் கொண் டான். உடனே அருகில் அமர்ந்திருந்த கருடாழ்வார் மேலே பறந்துகொண்டிருந்த விமானத்தின் நிழலைத் தன் கால் பெருவிரலால் தொட்டார். விமானம் திடீரென்று கீழிறங்கி திருக்கோயிலின் முன்னுள்ள குளத்தில் விழுந்தது. இன்னலுற்ற அரசன் நீந்திக்கரைக்கு வந்து அங்கு அமர்ந்து தியானித்துக் கொண்டிருந்த அகத்தியரை

வணங்கினுன். அவரிடம் தன் பிழையைச்சொல்லி உய்யும் வழி சொல்லியருளவேண்டினுன். அவர் சொல்லியவாறே குளக்கரையில் உட்கார்ந்து தேவாதிராஜனைக் குறித்துத் தவம் இருந்தான். அவர் தரிசனம் கிடைத்ததும் இரண்டு வரங்களை அருளுமாறு கெஞ்சினுன். குளத்தில் விழுந்த தன் விமானம் மேலே கிளம்பவேண்டும் என்பது ஒன்று; அக்குளத்தில் நீராடிப்பெருமாளைத் தரிசிக்கும் பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை வழங்கவேண்டும் என்பது மற்ருென்று. இரு வரங்களையும் அளித்தார் பெருமாள். இந்நிகழ்ச்சி நடைபெற்றது தை அமாவாசை என்னும் புனிதநாளில். ஆகவே அத்திருக்குளத்திற்கு தர்ச புஷ்கர்ணி என்ற பெயர் உண்டாயிற்று. (தர்சம் - அமாவாசை)

(4) அகத்தியர் ஒருநாள் காவிரியன்னையை அணுகித் தன்னை மணந்துகொள்ளவேண்டும் என்று விண்ணப்பித் தார். ஆனுல் அன்னை அதற்குச் சம்மதிக்கவில்லை. கோபங் கொண்ட அகத்தியர் அவளை ஒரு குடத்தில் (கும்பத்தில்) போட்டு அடைத்துவிட்டார். அவர் எவ்வளவோ கவனத் துடன் இருந்தும், ஒரு சமயம் அக்குடம் தரையில் வைக்கப் பட்டு சாய்ந்தது. உடனே காவிரி குடத்திலிருந்து வெளியேறி கிழக்கு நோக்கி ஓடினுள். அகத்தியர் மறு படியும் வெகுண்டார். காவிரியால் வளம்பெறும் பகுதியில் வாழ்வோர் எல்லாம் துன்புறட்டும் என்று சபித்தார் முனிவர். தனக்கென வாழாது பிறர்க்குரியாளராய் விளங்கும் காவிரி தேவாதிராஜனை நோக்கித் தேரழுந்தூரிலே தவஞ்செய்தாள். தன்பொருட்டு மக்களுக்கு ஏற்பட்ட சாபத்தைத் துடைத் தாள். ஆகவே, காவிரித் தாயாருக்குப் பெருமாள் அருகிலேயே இடம் கிடைத்துள்ளது.

(5) தேரழுந்தூருக்கு வடக்கே நான்குமைல் தொலை வில் வில்லியநல்லூர் என்ருேர் இடமுண்டு. அங்கு முற் காலத்தில் வில்வலன், வாதாபி என்ற இரு அரக்க சகோதரர்

வாழ்ந்து வந்தனர். அவருள் வில்வலன் மூத்தவன். வாதாபி இளையவன். நாள்தோறும் அவர்கள் ஒருவரை உண்ண அழைப்பார்கள். வாதாபியைக் கொன்றுக் கறி சமைத்து அவருக்கு இடுவான் வில்வலன். உண்மையை அறியாது அவர் உண்டவுடன், "ஏ, வாதாபி!" என்று வில்வலன் அழைப்பான். உடனே விருந்தாளியின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு "அண்ணா, வந்துவிட்டேன்" என்று வாதாபி ஓடிவருவான். இறந்துபோன விருந்தாளியை சகோதரர் இருவரும் சமைத்து உண்பார்கள். இதைப்பற்றிப் பலர் அகத்திய முனிவரிடம் சென்று முறையிட்டனர். அரக்கரை அடக்க உறுதி கொண்டார் முனிவர். ஒருநாள் அவர் அரக்கர் வாழும் ஊருக்குச் சென்றார். விருந்துக்கு அழைத்தவுடன் தயங்காது போய் அமர்ந்தார். இட்ட உணவை மிச்சமின்றி உண்டு முடித்தார். கைகழுவியதும் திண்ணையில் வந்து அமர்ந்துகொண்டு, "வாதாபி ஜீரணோபவ" என்று மந்திரத்தை உச்சரித்தார். தன் வயிற்றைத் தடவினார். வாதாபி ஜீரணம் ஆனான்; வழக்கம்போல் வெளிவர முடியவில்லை. அரக்கர் அட்டகாசம் ஓய்ந்தது. எனினும் மனித மாமிசத்தை உண்ட பாவம் அகத்தியரைப் பற்றிக் கொண்டது. ஆகவே, தர்ச புஷ்கர்ணியில் நீராடி தேவாதி ராஜனைக் குறித்துத் தவஞ்செய்து முடிவில் அகத்தியர் சாபம் நீங்கப்பெற்றார். இதற்குச் சான்றாக மகாமண்டபத்தின் வடபுறம் அகத்தியர்சிலை உள்ளது.

(6) மார்க்கண்டேயரைப்பற்றிய வரலாறு அனைவரும் அறிந்ததே. சிவபிரானிடம் மாறாத அன்பு பூண்ட மார்க்கண்டனைக் காலன் அணுகினான். சிவபிரான் காலனைக் கொன்று சிறுவனைக்காப்பாற்றினார். "இன்றுபோல் என்றும் பதினாறு ஆண்டு இளைஞனாகவே நீ இருக்கக் கடவை" என்று வரமளித்தார். ஆனால், என்றும் இவ்வுலகில் வாழ்ந்து இன்ப துன்பங்களை அனுபவித்துக்கொண்டு

இருப்பதில் பயனில்லை என்று உணர்ந்த மார்க்கண்டன் என்றும் அழியாத வீட்டுப் பேற்றைப் பெற விரும்பினான். தக்கோரை அணுகி, அவர் சொற்படி தேரழுந்தூரை அடைந்து தேவாதிராஜனை நினைந்து தவமிருந்து தன் விருப்பம் நிறைவேறப் பெற்றான். இதற்குச் சான்றாகக் கருவறையில் பெருமாளுக்கு வலதுபுறம் மார்க்கண்டேயர் சிலை உள்ளது.

(7) பிரகலாத ஆழ்வாருக்கும் இத்திருக்கோயிலுக்கும் தொடர்பு உண்டு. இரணியனை வதைத்துப் பிரகலாதனுக்கு அருள்புரிந்தார் நரசிங்கப்பெருமாள். ஆயினும் சிறுவனான பிரகலாதன் சீறியெழுந்த சிங்கத்தைக் கண்டதுடன் நில்லாமல், அழகே உருவான கண்ணனுடைய திருக்கோலத்தைக் கண்டு களிக்கவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார் பெருமாள். ஆகவே, சினம் அடங்கப்பெற்ற நரசிங்கமாக அவனுக்குக் காட்சிதந்து, பின்னர் ஆமருவியப்பனாகக் காட்சி தருகிறார். இவ்வருட் காட்சிகளைக் கண்டு மகிழ்ச்சியில் திளைக்கிறான் பிரகலாதன். இவை நடைபெற்றதற்குச் சான்றாக, பெருமாள் சன்னிதிக்கு இடப்புறம் சுவற்றை ஒட்டியபடி யோக நரசிம்மர் சிலை ஒன்றும், கருவறையில் பெருமாளின் வலப்புறம் பிரகலாதனின் அழகிய சிலை ஒன்றும் காணப்படுகின்றன.

(8) இத் திருக்கோயிலைப்பற்றிய இன்னொரு சுவையான வரலாறும் உண்டு. ஒரு சமயம் சிவபிரானும் திருமாலும் சொக்கட்டான் ஆடினார்கள். நடுவிருந்து முடிவு சொல்ல உமைப்பிராட்டியை நியமித்தார்கள். ஒருபுறம் கணவன், கொண்டவன்; மற்றொருபுறம் தமையன், கொடுத்தவன். ஆகவே பெரிதும் தயங்கிப் பின்னர் உமையும் ஒப்புக்கொண்டாள். ஆட்டம் நடந்தது. முடிவில், திருமாலே வென்றதாக உமைகூற, சிவபிரான் சினங்கொண்டார். உமையைப் பசுவாய் மாறும்படி சபித்தார்.

அவளைப் பிரிந்ததும், ஓர் அந்தணர் வேடம் பூண்டு, மரத்தின் கீழ் இருந்து வேதம் ஓதிவந்தார். பசுவாய் மாறிய உமையும் அவர் தங்கிய இடத்துக்குச் சுற்றுப்புறத்தில் மேய்ந்துகொண்டு திரிந்தாள். தன்மீது அளவில்லாத அன்புகொண்ட உமையின் துயரைத் துடைக்கும்பொருட்டுத் திருமால் கண்ணனுக மாறி அப்பசுவைக் காப்பாற்றி வந்தார். சிவனுர் வேதமோதியது இப்போதுள்ள வேதபுரீசுவரர் ஆலயத்தில் என்றும் உமையைக் காப்பாற்றக் கண்ணன் உருவில் திருமால் எழுந்தருளியது ஆமருவியப்பன் ஆலயத்தில் என்றும் கூறப்படுகிறது. இந்நிகழ்ச்சியைக் குறிக்கும் சொற்ருெடர் இன்றும் ஆமருவியப்பன் அருச்சனை மந்திரத்தில் இடம் பெற்றுள்ளது.

சன்னிதிகள்

ஆமருவியப்பன் திருக்கோயிலில் உள்ளவற்றுள் முதலாவது **1. பெருமாள் சன்னிதி** ஆகும். மூலவரின் திருநாமங்கள் — தேவாதிராஜன், கோசகன் என்பன. கோசகன் என்னும் சொல்லின் மொழி பெயர்ப்பே ஆமருவியப்பன் என்பது. பெருமாள் சாளிக்ராம ரூபியாய் நின்ற திருக்கோலத்தில் காட்சி அளிக்கிருர். திருமுகமண்டலம் கிழக்கு நோக்கி உள்ளது. உயரம் சுமார் பத்து அடி இருக்கும். சிற்பக் கலையின் உச்சநிலைக்கு எடுத்துக்காட்டாக இதைச் சொல்லலாம். அவ்வளவு அழகு! இதனுலன்ருே திருமங்கையாழ்வார் இச்சன்னிதியில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டு அவனழகில் சொக்கி நின்றிருக்கிருர்? இயற்கை அழகுதான் அப்படியென்ருல், செயற்கை அழகிலும் அப்பனுக்குக் குறைவில்லை. தலையிலே தங்க கிரீடம் நெற்றியில் வைரத் திருநாமம், தோள்களிலே வாகுவலயம், கழுத்திலே சஹஸ்ரநாம மாலை, மார்பிலே திருமகள்,

இடையிலே தசாவதார சித்திரங்கள் கொண்ட அரைக் கச்சை. நான்கு கரங்களிலே சங்கு, சக்கரம், கதை ஆகியவை மூன்றில் இடம் பெறுகின்றன. நான்காவது கரம் சாதாரணமாக அபய முத்திரையுடன் இருக்கும். ஆனுல் இப்பெருமாளுக்கு பத்ம முத்திரையுடன்இருக்கிறது. இவ்வாறு, அளப்பரும் அழகுடன் ஒளிரும் பெருமாளுக்கு வலப்புறம் பிரகலாத ஆழ்வாரும், அவருக்கு சற்றுமுன்னுல் மார்க்கண்டேயரும், இடப்புறம் கருடாழ்வாரும், அவருக்கு சற்று முன்னுல் காவிரித் தாயாரும் காட்சி அளிக்கின்றனர். மூலவருக்கு முன்னுல் திருமகளும் புவிமகளும் உடனிருப்ப ஸ்ரீ ஆமருவியப்பன் உற்சவ மூர்த்தியாய்த் திகழ்கிருர். "திருவுக்கும் திருவாகிய செல்வா" என்னும் ஆழ்வார் வாக்குக்கு இலக்கியமாய் விளங்குகிருர் இவர்.

2. தாயார் சன்னிதி

தாயாருடைய திருநாமம் செங்கமலவல்லி என்பதாகும். கிழக்கே திருமுக மண்டலத்துடன் வீற்றிருக்கும் திருக் கோலத்தில் காட்சி அளிக்கிருர் தாயார். இவருடைய அழகையும் கருணையையும் உணர்ந்த திருமங்கை மன்னன் "செங்கமலத் திருமகளும்" என்று தொடங்கும் பாசுரத்தில் வியந்து பாராட்டுகிருர். மூலவருக்கு முன்னுல் உற்சவ விக்கிரகம் உள்ளது.

3. ஸ்ரீ ராமர் சன்னிதி

இது பெருமாள் சன்னிதிக்குத் தெற்கே அமைந் துள்ளது. இராமபிரானுடைய திருமுகமண்டலம் கிழக்கு நோக்கி உள்ளது. அவருக்கு அருகில் சீதை, இலக்ஷ்மணர் ஹனுமார் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இந்நால்வருக் கும் உற்சவ விக்கிரகங்கள் உள்ளன.

தேவாதிராஜனே இராமபிரானுகக் காட்சி அளித்து சிவபிரானை மகிழ்வித்தார் என்று ஒரு கதை உண்டு. இதைப் பற்றிய குறிப்பு ஆமருவியப்பன் அருச்சனை மந்திரத்தில் உண்டு. இதை ஒட்டி மாசி மாதம் புனர்வஸு நட்சத்திரத்தில் பெருமாள் தேரடிவரை சென்று சிவபிரானுக்கு இராமனுகச் சேவை தரும் வழக்கம் இன்றும் உள்ளது.

4. வாசுதேவர் சன்னிதி

இது பெருமாள் சன்னிதிக்கு வடக்கே அமைந்துள்ளது. இதில் அகத்தியர் சிலை ஒன்றும் உள்ளது.

5. ஹனுமார் சன்னிதி

வெளிச் சுற்றில் நுழையும் போது நாம் இதனைக் காணலாம். அஞ்சிலே ஒன்று பெற்ற அண்ணலைத் தரிசித்து மேற் செல்லலாம்.

6. ஆழ்வார் சன்னிதி

இதுவும் வெளிச் சுற்றில் உள்ளது. தாயார் சன்னிதிக்கு முன்னுல் உள்ள ஒரு சிறு மண்டபத்தில் பொய்கை ஆழ்வார் முதலான பன்னிரு ஆழ்வார்கள் மூலவரும் உற்சவருமாகக் காட்சி அளிக்கின்றனர்.

7. ஆண்டாள் சன்னிதி

இது வெளிச் சுற்றின் வட பகுதியில் உள்ளது. ஆழ்வாருள்ளே தனிச் சிறப்புடன் விளங்கும் "சூடிக் கொடுத்த சுடர்க் கொடியின்" சன்னிதி கிழக்கு நோக்கி உள்ளது. சிறிய அழகான மண்டபம் ஒன்று சன்னிதியின் முன் அமைக்கப்பட்டிருக்கிறது.

8. தேசிகர் சன்னிதி

வடகலை சம்பிரதாயத்தை ஒட்டிய கோயில் ஆதலால் வேதாந்த தேசிகருக்கு மகாமண்டபத்திலேயே ஓர் அழகான சன்னிதி உள்ளது. தெற்குநோக்கி அமைந்துள்ள இதில் ஹயக்ரீவ மூர்த்தியும் காணப்படுகிறார். யாக்ஞவல்க்யர் என்னும் மாமுனிவரின் தவத்திற்கு இரங்கி ஸ்ரீமந் நாராயணனே குதிரை உருவத்தில் வந்து ஞானோபதேசம் செய்கிறார். ஆகவே ஞானத்தின் உரு ஹயக்ரீவர். இவரை யும் நாம் இங்கு தரிசிக்க முடிகிறது.

9. விஷ்வக்ஸேனர் சன்னிதி

இவரைச் சேனை முதலியார் என்று தமிழிற் கூறுவர். திருமகளே இவருக்கு 25 விஷயங்களை உபதேசித்து அருளியதாக ஆழ்வார்கள் பாடிப்போற்றுகின்றனர். நம்மாழ்வாருக்கு ஞானகுருவாய்த் திகழ்ந்தவர் இவரே என்பது வரலாறு. சைவக் கோயில்களில் விநாயகருக்கு உள்ள இடம் வைணவக் கோயில்களில் இவருக்கு உண்டு.

10. கம்பர் சன்னிதி

திருக்கோயிலை அடைந்து, முதல் கோபுர வாயிலைக் கடந்ததும் இடதுபுறம் திரும்பினால் கம்பர் சன்னிதி காணப்படும். இரண்டு பெரிய பிறைகள். ஒன்றில் மிகப் பழமையானதும் உருச் சிதைந்ததுமான கம்பர் தம்பதிச் சிலைகள் காணப்படுகின்றன. அடுத்ததில் சுமார் இருபது ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்ட சிலைகள் உள்ளன. கம்பரும் அவர் மனைவியும் கைகூப்பிய வண்ணம் பெருமாளை நோக்கி நிற்கின்றனர்.

தீர்த்தங்கள்

1. தர்ச புஷ்கர்ணி: இது திருக்கோயிலுக்கு முன் உள்ளது. சிறியது; ஆனால் மிக அழகானது. நாற்புறமும் நிழல் நிறைந்த தோட்டங்களும், வடகரையில் வசந்த மண்டபமும் கொண்டது. உபரிசரவசு என்னும் அரசனுடைய தேர் அழுந்தியது இக்குளத்தில் தான்.

2. கஜேந்திர புஷ்கர்ணி. இது திருக்கோயிலுக்கு வடக்கே சுமார் ஒரு பர்லாங்கு தொலைவில் உள்ளது. பெருமாளுடைய திருமஞ்சனத்துக்கு இங்கிருந்துதான் நீர் கொண்டுவரப்படுகிறது.

உற்சவங்கள்

சித்திரை

வருடப்பிறப்பு	...	பெரிய திருமஞ்சனம் - சூரியப்ரபையில் பெருமாள் புறப்பாடு.
ஸ்ரீராமநவமி	...	5 நாள் உற்சவம். பௌர்ணமியன்று பெருமாளும் தேசிகரும் வெள்ளிச்சிவிகையில் வீதிஉலா. வசந்த உற்சவம்.
அக்ஷயத்ரிதியை		காலையில் கருடசேவை பாஷ்யகாரர் உற்சவம் 10 நாள்

வைகாசி

பிரம்மோற்சவம்	....	10 நாள் 9ம் நாள் திருத்தேர் 11ம் நாள் – அஹோபில மடத்தில் எழுந்தருளி சேவை. 12, 13, 14ம் நாட்கள் புஷ்கர்ணி மண்டபத்தில் ஊஞ்சல் காட்சி. 15ம் நாள் இந்திர விமானம் அல்லது பூப்பல்லக்கில் வீதிஉலா.
நம்மாழ்வார் உற்சவம்	...	10 நாள்

ஆடி

ஆண்டாள் உற்சவம்	...	10 நாள் பூரத்தன்று பெருமாளும் ஆண்டாளும் பல்லக்கில் சென்று கஜேந்திர புஷ்கர்ணியில் தீர்த்தவாரி — இரவு மண்டபப்படி.
18ம் பெருக்கு	...	பல்லக்கில் பெருமாள் மல்லியத்துக்கு எழுந்தருளல், காவேரியில் தீர்த்தவாரி, இரவு ஆராதனம், கோயில் திரும்புதல்.
வெள்ளிக்கிழமைகள்	...	தாயாருக்கு ஊஞ்சல் உற்சவம்.

ஆவணி

கிருஷ்ணஜயந்தி	....	கண்ணனுக்கு ஊஞ்சல்
மறுநாள்	....	உறியடி-பெருமாள், நாச்சியார், கண்ணன் வீதிஉலா

புரட்டாசி

தேசிகர் உற்சவம்	....	10 நாள் 10ம் நாள் கருடசேவை, தேசிகர் மங்களா சாஸனம், கஜேந்திர புஷ்கர்ணியில் தேசிகர் தீர்த்தவாரி இரவு சாற்றுமுறை மண்டபப்படி. 11ம் நாள் பெருமாளும் தேசிகரும் தர்ச புஷ்கர்ணி படிக்கட்டில் புறப்பாடு. 12ம் நாள் தெப்பம்
நவராத்திரி	....	தாயாருக்கு 9 நாள் உற்சவம் தினமும் உட்சுற்றில் புறப்பாடு, கொலு. 9ம் நாள் சாற்றுமுறை 10ம் நாள் குதிரை மீது தாயார் சேவை.

ஐப்பசி

பவித்ர உற்சவம் .... 5 நாள்

முதல் நாள் யாகசாலை ஆரம்பம்
5ம் நாள் காலை சாற்றுமுறை, கருடசேவை, தீர்த்தவாரி.

அன்று இரவு சிரவண சாற்று முறை, மண்டபப்படி, யாகசாலைப் பூர்த்தி.

சிரவணத்திலிருந்து லக்ஷார்ச்சனை ஆரம்பம்.

கார்த்திகை

திருமங்கையாழ்வார் உற்சவம்.... 10 நாள்

திருக்கார்த்திகை .... 10ம்நாள் பெருமாளும் ஆழ்வாரும் தேரடிவரை எழுந்தருளல், ஆழ்வார் கோயிலில் மண்டபப்படி.

11ம் நாள் சொக்கல், லக்ஷதீபம் லக்ஷார்ச்சனை பூர்த்தி.

மார்கழி

அமாவாசை .... பகற் பத்து உற்சவம் ஆரம்பம் 10ம்நாள் மோஹன அவதாரம், திருமங்கையாழ்வார் திருவடி தொழல்.

வைகுண்ட ஏகாதசி .... இராப் பத்து உற்சவம் ஆரம்பம். 10ம்நாள் இரவு பெருமாள் புறப்பாடு நம்மாழ்வார் திருவடி தொழல்

11ம் நாள் இயற்பா சாற்றுமுறை
12ம் நாள் தேசிக பிரபந்த சாற்று முறை

தை

மகரசங்கராந்தி .... செல்வர் திருமஞ்சனம்

கணு .... தாயார் புறப்பாடு, தீர்த்தவாரி (இரவு) குதிரைமீது பெருமாள் காட்சி, திருமங்கையாழ்வார் பாசுர ஆரம்பம்.

மூன்ரும் தேதி	....	மட்டையடி, பெருமாள் வீதிப் புறப்பாடு (இரவு) மாலே மாற்றி ஏகாசனம்.
நான்காம் தேதி	....	ஏகாசனம், திருமஞ்சனம்
அமாவாசை	....	பெரிய திருமஞ்சனம், இரவு கருட சேவை
மறுநாள்	....	தாயார் அத்யாயன உற்சவம் ஆரம்பம்.
		5ம் நாள் பெருமாளும் தாயாரும் புறப்பாடு, தாயார் சன்னிதியில் ஏகாசன மண்டபப்படி

வெள்ளிக்கிழமை தோறும் தாயாருக்கு ஊஞ்சல்

மாசி

புனர்வஸு	....	பெருமாள் தேரடி செல்லல், சிவ பிரானுக்கு ஸ்ரீ ராமனுக சேவை அருளல்.
மகம்	....	தேரடி வரை எழுந்தருளல், தர்ச புஷ்கர்ணியில் தீர்த்தவாரி.

பங்குனி

உத்திரம்	...	தாயாருக்கு உற்சவம் 10 நாள் 9ம் நாள் காலே தீர்த்தவாரி, திருத்தேர்,
		மாலே திருக்கல்யாணம்
		10ம் நாள் விடையாத்தி, ஊஞ்சல்
ஹஸ்தம்	...	கம்ப நாட்டாழ்வார் உற்சவம் ஆரம்பம். 3 நாள்

வாகனங்கள்

பெருமாளுக்கு வெள்ளி கருடன், ஆஞ்சநேயர், ஆதிசேஷன், சூர்யப்ரபை, இந்திரவிமானம், குதிரை, யானை ஆகிய வாகனங்கள் உள்ளன. இவற்றுள் கருட சேவை வருடத்தில் ஐந்துமுறை உண்டு. அவை முறையே சித்திரை மாதம் அக்ஷயத்ருதியை காலையிலும், வைகாசி மாதம் நான்காம் திருநாள் இரவிலும், புரட்டாசி மாதம் சிரவணத்தன்று காலையிலும், ஐப்பசி மாதம் சிரவணத் தன்று காலையிலும், தை அமாவாசையன்று இரவிலும் ஆம். சூர்யப்ரபையில் பெருமாள் காட்சி தருவது வருடப் பிறப்பன்றும் வைகாசி மாதம் இரண்டாம் நாள் உற்சவத்தின் போதுமே.

செங்கமலவல்லித் தாயாருக்கு சூர்யப்ரபை, யாளி, அன்னம், யானை, சிங்கம், ஆகிய வாகனங்கள் உள்ளன. வாகனங்கள் யாவும் நன்கு பாதுகாக்கப்பட்டு வைக்கப் பட்டுள்ளன.

மற்றகோயில்கள்

தேரழுந்தூரில் ஆமருவியப்பன் திருக்கோயிலைத்தவிர வேறு சில உள்ளன.

1. கோவிந்தராஜர் கோயில். இது தொழுதாலங் குடி வட்டத்தில் உள்ளது. ஆமருவியப்பன் கோயிலுக்கு வடக்கே சுமார் இரண்டு பர்லாங்கு தொலைவில் இக் கோயில் அமைந்துள்ளது. மூலவரின் திருநாமம் கோவிந்தராஜப் பெருமாள், தாயாரின் திருநாமம் புண்டரீகவல்லி. ஆமருவியப்பன் மாடுகளை மேய்த்த காலத்தில் தொழுவம் இருந்த இடம் ஆதலால் தொழு தாலங்குடி என்று பெயர் பெற்றது என்பர்.

2. அரங்கநாதர் கோயில். ஆமருவியப்பன் கோயில் சன்னிதித்தெருவின் மத்தியில் தெற்குநோக்கியபடி

அமைந்துள்ளது. இக்கோயில் மூலவர் அரங்கநாதர். தாயார் அரங்கநாயகி. பள்ளிகொண்ட திருக்கோலம். அழகான பெரிய சிலாவுருவம்.

3. **ஆழ்வார் கோயில்.** இது ஆமருவியப்பன் சன்னிதித்தெருவில் திருமங்கையாழ்வாருக்கென எழுப்பப் பட்டுள்ள தனிக்கோயில். இங்ஙனம் அமைவது அரிது. திருமங்கையாழ்வார் தேவாதிராஜனைக் கண்டு வழிபடும் நோக்கத்துடன் வந்து கோயில் அருகில் நின்றதும், அங்கு இருந்தோரைப் பார்த்து பெருமாளின் திருநாமத்தை விசாரித்தார். 'தேவாதிராஜன்' என்று அவர்கள் கூறவே "பெருமாளைப் பாடிய வாயால் பேரரசனைப் பாட மாட்டேன்" என்று சொல்லித் திரும்பினார். ஆனால் ஓர் அடி கூட எடுத்துவைக்க முடியவில்லை. உடனே பெருமாள் திருவுள்ளத்தை அறிந்துத் தன் பிழைக்கு வருந்தி, " தந்தைகாலில் பெருவிலங்கு தாளவிழ நள்ளிருட்கண் வந்த எந்தை பெருமானூர் மருவிநின்ற ஊர் போலும்" என்று தொடங்கி நாற்பது பாசுரங்களைப் பாடினார். அவ்வாறு அவர் நின்று பாடிய இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது, தினம் இரண்டுவேளையும் பெருமாள் கோயிலிலிருந்து மேளத்துடன் நைவேத்யம் கொண்டுவந்து, இங்கு பூசை நடத்துகின்றனர், பொருளைத் திருடி அருளைக்கொண்ட மங்கை மன்னனைக் கண்ணாரக் கண்டு களிக்கலாம்.

4 **சிவன்கோயில்.** ஆமருவியப்பன் கோயிலில் இருந்து கண்ணை மூடிக்கொண்டு நேரே கிழக்கு நோக்கி நடந்தால் சுமார் ஐந்து பர்லாங்கு தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளது. மூலவரின் திருநாமம் வேதபுரீசுவரர். அம்பாளின் திருநாமம் சௌந்தரநாயகி. தீர்த்தம் - வேத தீர்த்தம். சிவபிரானும் திருமாலும் சொக்கட்டான் ஆடிய வரலாறு முன்னரே தரப்பட்டுள்ளது. ஆட்டத்தில் தோற்ற சிவபிரான் சந்தனமரத்தின் கீழ் இருந்து வேதம்

ஓதி வந்தமையால் வேதபுரீசுவரர் என்ற பெயர் பெற்றார். இதனால் "வேதம் பிறந்த ஊர் தேரழுந்தூர்" என்று இத்தலம் பாராட்டப்பட்டுள்ளது. அப்பர், சம்பந்தர் ஆகிய இருசமயகுரவரால் பாடப்பெற்ற புகழ் உடையது.

5. **பிள்ளையார்கோயில்.** ஆமருவியப்பன் கோயில் சன்னதித்தெருவில் ஆரம்பத்தில் தெற்கு நோக்கியபடி அமைந்துள்ளது. இங்கு கோயில்கொண்டு அருளியிருக்கும் பிள்ளையாருக்கு 'வழிகாட்டிப்பிள்ளையார்,' 'ஞானசம்பந்த விநாயகர்' என்ற பெயர்கள் உண்டு. ஞானசம்பந்தர் வேதபுரீசுவரரைக் கண்டு வழிபட இப்பதிக்கு வந்தாராம். எதிரும் புதிருமாக இருகோயில்களைக் கண்டு எது சிவன் கோயில் என்று அறியாது விழித்தாராம். பின்னர் அருகிலிருந்த பிள்ளையாரை நோக்க, அவர் தம் தந்தையார் இருக்கும் இடத்துக்கு வழிகாட்டினாராம்.

இலக்கியக் குறிப்புக்கள்

தமிழ் இலக்கியத்தில் தேரழுந்தூர் இடம் பெற்று உள்ளது. முதற் கரிகாலனின் தலைநகராக விளங்கியது இவ்வூர். அழுந்தூர் வேள் என்று அவ்வரசன் குறிப்பிடப் படுகிறான். வெண்ணிப் பறந்தலை என்று குறிப்பிடப் படும் இடம் நீடாமங்கலத்துக்கு அருகிலுள்ள வெண்ணியே ஆகும். அவ்வெண்ணியில் முதற்கரிகாலன் பதினொரு குறுநில மன்னரையும், பாண்டியன் சேரன் ஆகிய இரு பெரு வேந்தரையும் ஒருங்கே முறியடித்தான். அவ் வெற்றியின் பயனாக அவனுடைய தலைநகரான அழுந்தூரில் பெரிய ஆரவாரம் ஏற்பட்டது. இச் செய்திகளை புறநானூற்றில் 65, 352, 395-ம் பாடல்களும் அகநானூற் றில் 246-ம் பாடலும் தெளிவாக்குகின்றன.

முதற்கரிகாலனின் படைத் தலைவனாகவும் அறமன்றத் தலைவனாகவும் விளங்கினான் 'அழுந்தூர் வேள்' என்னும்

திதியன். புகழ்பெற்ற இரண்டாம் கரிகாலனுடைய தாய் திதியனுடைய மகளாவாள். திதியனுடைய காதலி 'அன்னிமிஞலி' என்றும் அவள் துயரைத் துடைக்க கோசர் என்ற வீரரை எதிர்த்து வெற்றிகொண்டான் என்றும் தெரிகிறது. இவ்வாறு ஆண்மையும் அருளும் பெற்று புகழுடன் திதியன் வாழ்ந்தது அழுந்தூர். இவைபற்றிய செய்திகளை அகநானூற்றில் **196, 226-ம்** பாடல்கள் தெளிவாக்குகின்றன.

இரண்டாம் கரிகாலனுடைய தந்தை உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி என்பவனாவான். இவன் அழுந்தூரைத் தலைநகராகக்கொண்டு சோழநாட்டின் ஒரு பகுதியைத் திறம்பட ஆண்டுவந்தான். அழுந்தூர் வேள் திதியனுடைய மகள் 'அழுந்தை வேண்மாளை' சென்னி மணந்தான். இவர்களுக்குப் பிறந்தவனே இரண்டாம் கரிகாலன். இவனைக் கரிகாற் பெருவளத்தான் என்றும் குறிப்பதுண்டு. இவனுடைய காலத்தில்தான் சோழநாட்டின் தலைநகர் அழுந்தூரிலிருந்து உறையூருக்கு மாறிற்று. இச்செய்திகளைப் பொருநற் ஆற்றுப்படையின் ஒரு பகுதியும், தொல் காப்பியத்துக்கு நச்சினார்க்கினியர் இயற்றியுள்ள உரைப் பகுதிகளும் தெரிவிக்கின்றன.

சிறந்த அரசரையும் வீரரையும் பயந்த அழுந்தூர் பலபெரும் புலவர்களையும் அளித்துள்ளது. 'திதியன் பெரியன்' என்ற அரசனது சபையில் விழுமயனார் என்ற சங்கப்புலவர் வாழ்ந்தார் என்றும் அவர் சொற்பொருள் சிறப்புக்களோடு பல பாடல்களைப் பாடிப் பெருமையுற்றார் என்றும் அறிகிறோம். மூன்றாம் கரிகாலனுடைய தாய் மாமனாகிய இரும்பிடர்த் தலையார் என்ற அருந்தமிழ்ப் புலவர் இவ்வூரில் வாழ்ந்தவரே.



கம்பரும், அவர் மனைவியாரும்

கலைக்கோயிலும், திருக்கோயிலும்

இராமாவதாரப் பெருங்காப்பியமாம் கலைக்கோயிலை யிறுவிய கம்ப நாட்டாழ்வார் ஆமருவியப்பன் திருக் கோயிலுடன் நெருங்கிய தொடர்புடையவர். சாலிவாகன சகாப்தம் 800-ஆம் ஆண்டு அல்லது கி. பி. 878 ஐ ஒட்டி ஒரு நாள் இக் கோயிலில் உள்ள கொடிமரத்தருகே ஒரு குழந்தை கிடப்பதைக் கண்டான் ஓர் உவச்சன். கம்பத் தின் அருகே கிடந்ததால் கம்பன் என்று பெயரிட்டு அதை அன்பாக வளர்த்து வந்தான். நாள்தோறும் தன் வளர்ப்புத் தந்தையுடன் திருக்கோயிலுக்குப் போய் அங்கு பல அரிய விஷயங்களைக் கண்டும் கேட்டும் அறிந்தான் கம்பன். வேத சாத்திரங்கள், புராணங்கள் ஆகியவற்றில் ஆழ்ந்த புலமையுடைய அறவோர் பலர் அந்நாளில் அங்கு வாழ்ந்தனர், ஆகவே கடவுளுணர்வும், சமய இலக்கிய அறிவும் நிரம்பப் பெற்றான் கம்பன். இச்செய்திகளைப் புலவர் புராணம் என்னும் நூலில் "ஈரார் தரும் சோழ நாடதனில்" என்று தொடங்கும் பகுதியில் காணலாம்.

"கம்பன் சீர்" என்று வழங்கும் பாடல் பின்வருமாறு--

கம்பன் பிறந்தவூர் காவிரி தங்குமூர்
கும்பமுனி சாபம் குலைந்தவூர் செம்பதுமத்
தாதகத்து நான்முகனும் தாதையும் தேடிக்காணா
ஓதகத் தார்வாழும் அழுந்தூர்

சோழன் அவையைச் சென்றடைந்தாள் பெண்ணொருத்தி. அவளை நோக்கி "நீ யார், எவ்வூரைச் சேர்ந்தவள்?" என்று மன்னன் வினவ, அப்பெண்ணின் விடையாக அமைந்தது இப்பாடல். அப்பெண்ணின் கருத்துப்படி அழுந்தூரின் பெருமைகளிலே தலைசிறந்தது கம்பன் பிறப்பிடம் என்பதுதான்.

கம்பராமாயணத்துக்குச் சிறப்புப் பாயிரங்கள் உள்ளன. அவை தனியன்கள் என்றும் வழங்கப்பெறும்.

அவற்றுள் ஒன்று '......சோழநாட்டுத் திருவழுந்தூர் உவச்சன் .... கம்பன்' எனக் குறிக்கிறது.

ஆமருவியப்பன் கோயிலுக்குள் நுழைந்தவுடன் இடது பக்கம் திரும்பினால் கம்பன் சன்னிதி காணப் படுகிறது. இரண்டு மாடங்கள் உள்ளன, ஒன்றில் மிகப் பழமையான கம்பன் சிலை ஒன்றும் அவன் மனைவி சிலை ஒன்றும் உள்ளன. அவை உருச்சிதைந்துள்ளன. மற்றொன்றில் அண்மையில் நிறுவப்பட்ட சிலைகள் உள்ளன. கம்பன் தம்பதிகள் கைகூப்பிய வண்ணம் பெருமாளை நோக்கி நின்றுள்ளனர். கவியரசன் கம்ப னுக்குத் தனியானதொரு சன்னிதி வேறெங்கும் இல்லை.

ஆமருவியப்பன் கோயிலுக்குத் தெற்கே சுமார் ஒரு பர்லாங்கு தொலைவில் ஒரு பெரிய திடல் கிடக்கிறது. அதில் சுமார் 15 அடி உயரமுள்ள 'கம்பன் மேடு' காட்சி அளிக் கிறது. திடலைச் சுற்றி இரும்புக் கம்பிகளைக் கொண்டு வேலி போட்டுப் பாதுகாக்கின்றனர் இந்திய அரசாங்கத் தின் புதைபொருள் துறையினர். மேட்டில் உடைந்த பானை ஓடுகளைத்தான் நாம் காணமுடிகிறது. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன் அங்கே தோண்டியபோது பொற் காசுகளும் செப்புக் காசுகளும் நிரம்பக் கிடைத்தனவாம். அவற்றுள் மூன்று செப்புக் காசுகளும் ஒரு பொற்காசும் ஆமருவியப்பன் கோவில் அலுவலகத்தில்உள்ளன. கம்பன் மேட்டுக்கு அருகே காளிகோயில் ஒன்று உள்ளது. அதில் கம்பனும் அவன் முன்னோர்களும் வழிபட்டு வந்தனர் என்று கூறப்படுகிறது.

கம்பன் மேட்டைச் சுற்றியுள்ள நன்செய் நிலத்துக்கு 'கம்பன் பட்டம்' என்ற பெயரே இன்றும் வழக்கில் இருந்து வருகிறது. மேலும், அரசாங்கக் கணக்குகளில் இப்பகுதி கம்பன்பட்டம் என்றேகுறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை கூறியவற்றால், கம்பன்மேடு என்று தற்போது வழங்கப்படும் இடத்தில் தான் கம்பனும் அவனுடைய தந்தை முதலானோரும் வாழ்ந்தனர் என்பது புலனாகிறது.

ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாதம் ஹஸ்த நட்சத்திரத்தில் தொடங்கி மூன்று நாட்களுக்குக் கம்பன் திருவிழா நடைபெறுகிறது. ஆமருவியப்பன் திருக்கோயிலுடன் தொடர்பு உடைய காரணத்தால் கம்பனுக்குக் கோயிலாரே சிறப்பான முறையில் விழா எடுக்கின்றனர். அம்மூன்று நாட்களிலும் தேரழுந்தூரில் மக்கள் கூட்டம் நிரம்பியிருக்கும். பற்பல பகுதிகளிலிருந்தும் தமிழறிஞர் வந்து கல்வியிற் பெரிய கம்பனின் பெருமைகளைப் பேசி மகிழ்வர்; ஆயிரக்கணக்கான தமிழன்பர் வந்து அவற்றைக் கேட்டுப் பயனும் இன்பமும் அடைவர். ஒரு புலவனுக்கு எவ்விடத்தில் வேண்டுமானாலும் விழா எடுக்கலாம். எனினும் அவனுடைய பிறப்பிடத்திலே அது தனிச் சிறப்புடன் விளங்குவதைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கு உணர்வர். ஆகவே அழுந்தூர் சைவ, வைணவ பக்தர்களுக்கே அன்றி இலக்கிய ரஸனை உள்ள அனைவருக்குமே உரிய ஒரு சிறந்த யாத்திரைத்தலம் ஆகிவிட்டது.

கம்ப ராமாயணம் யுத்தகாண்டம் நாகபாசப்படலத்தில் இந்திரஜித்து திடீரென வானத்தில் எழுந்து மறைவதை வருணிக்கும் போது "அழித்ததேர் அழுந்தா முன்னம் அம்புடன் கிடந்து வெம்பி" என்ற சொற்றொடர் வருகிறது. இதனால் தன்னூரான அழுந்தூரின் பெருமையை மறைமுகமாகக் கம்பனே சுட்டிக்காட்டுகிறான் என்பர் பெரியோர். இன்னும், வான்மீகி இயற்றிய முதல் நூலில் இல்லாத இரணியன் வதைப் படலத்தைத் தன் காப்பியத்திலே புகுத்தியிருக்கிறான் கம்பன். நாள்தோறும் ஆமருவியப்பன் சன்னிதிக்குச் சென்று வந்ததால் அவன் பெருமாளருகே எழுந்தருளியிருக்கும் பிரகலாத

ஆழ்வாரிடமும், கருவறைக்கு முன் வலப்புறம் எழுந்தருளி யுள்ள நரசிங்கப்பெருமாளிடமும் இணையிலா ஈடுபாடு கொண்டிருக்கக்கூடும். ஆகவே தான் எழுப்பிய கலைக் கோயிலாம் இராமாயணத்தில் நரசிங்கப் பெருமாளுக்கும் அவரருளில் திளைத்த பிரகலாதனுக்கும் உயரிய ஓர் இடம் அளித்து விட்டான் என்று கொள்ளுதல் முற்றிலும் பொருந்தும்.

கம்பனை ஆதரித்த சடையப்ப முதலியார் வாழ்ந்தது 'வெண்ணெய்' என்னும் நல்லூர். தேரழுந்தூரிலிருந்து மாயூரம் குடந்தைப் பெருஞ்சாலைக்குச் சென்று பின்னர் அங்கிருந்து வடமேற்காக சென்றால் சுமார் 6 மைல் தொலை வில் வெண்ணெய் என்னும் ஊர் உள்ளது. இன்று அது 'கதிராமங்கலம்' என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது. அங்கு சடையப்பவள்ளலோடும் அவர் வழி வந்தவர்களோ டும் தொடர்பு உடைய கோயில், நில புலன்கள் யாவும் காணப்படுகின்றன. கல் வெட்டுக்கள் சிலவும் கிடைத்தன என்று அறியப்படுகிறது.

இவை தவிர, திருவழுந்தூரந்தாதி, சோழமண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், கம்பராமாயணத் தனியன், சடகோபர் அந்தாதி ஆகிய நூல்களிலும் கம்பன் பிறந்த ஊர் தேரழுந்தூர் என்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன.

கல்வெட்டுக்கள்

தாயார் சன்னிதியின் முன் மண்டபத்தில் வலதுபுறச் சுவற்றில் ஒரு கல்வெட்டு உள்ளது. 'விய வருடம் பங்குனி மாதம் பத்தாம் தேதி ஆமருவிசுவாமி திருவண்ணாழி மண்டபம் அனந்தநாராயண பிள்ளை தருமம்' என்று அதில் எழுதப்பட்டிருக்கிறது. இதில் குறிப்பிடப் பட்டுள்ள மண்டபம் கோயில் மதிற்சுவரை ஒட்டியபடி

மேற்கிலும் வடக்கிலும் நீளமாக இருந்தது என்று தெரிகிறது. இப்போது அதில் பாதிக்குமேல் மறைந்துபோய் உயரிய மேடை மட்டும் எஞ்சியிருக்கிறது. வடப்புறம் அம்மண்டபத்தின் ஒரு பகுதி நிற்கிறது.

கோயிலுக்குள் நுழையும்போது இராஜகோபுரத்தைக் கடந்ததும் இடதுபுறம் திரும்பினால் சுவற்றின் அடிக்கல் பலகைகளில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றின் பெரும்பகுதிகள் தளவரிசைக்குக் கீழ் மறைந்து போயிருக்கின்றன. பழம்பொருள், கல்வெட்டு ஆகியவற்றை ஆராய்வதற்கென்றே அமைந்துள்ள சென்னைப் பல்கலைக்கழகத் துறையில் இவைபற்றிய தகவல்கள் காணப்படவில்லை.

சிற்பங்கள்

கோயிலில் உள்ள சிற்பங்களில் இரண்டு நம் கவனத்துக்கு உரியவை. தாயார் சன்னிதிக்கு மேலுள்ள விமானத்தின் பிற்பகுதியில் நேராக மேற்கு நோக்கியபடி ஒரு சுதைச் சிலை இருக்கிறது. பதும பீடத்தில் திருமகள் அமர்ந்திருக்கும் அழகிய கோலம் கண்டு இன்புறத்தக்கது. உறுப்பிலக்கணங்கள் யாவும் சிறந்த முறையில் அமைந்து உள்ளன.

அதே விமானத்தில் வடக்குநோக்கிய பகுதியில் மேற்கு ஓரத்தில் ஒரு அருமையான சுதைச்சிலை உள்ளது. இது அழகானது மட்டும் அன்றி, அபூர்வமானதும் கூட. எட்டு தோள்களோடும் நான்கு முகங்களோடும் நின்ற திருக்கோலத்தில் இலக்குமி காட்சி அளிப்பது கலைக்கண் உள்ளோர்க்கெல்லாம் அரிய விருந்தாகும். நான்கு முகங்களில் மூன்று முறையே கிழக்கு, வடக்கு, மேற்குநோக்கி உள்ளன. நான்காவது முகம் வடக்கு நோக்கியவாறு நடு முகத்துக்கு மேலே அமைந்துள்ளது.

தலத் தனிச் சிறப்புக்கள்

கண்ணபிரானுக்கு உகந்த தலங்கள் ஐந்தில் இது ஒன்றாகும் ஆமருவியப்பன் சன்னிதி வேதபுரீசுவரர்

சன்னிதிக்கு நேர் எதிரே அமைந்துள்ளது. கருவறையில் பெருமாளுக்கு அருகில் கருடாழ்வார் நின்றுள்ளபடியால், மற்ற கோயில்களில் காணப்படுவது போன்று பெருமாளுக்கு எதிரே பெரிய திருவடி எனப்படும் கருடாழ்வாரைக் காண முடியாது. ஆமருவியப்பன் மூலவரில் ஆகட்டும், உற்சவரில் ஆகட்டும் வலது கரங்களில் ஒன்றில் அபய முத்திரைக்குப் பதிலாக பதும முத்திரையைக் காணலாம். "திருவுக்குந் திருவாகிய செல்வா" என்ற ஆழ்வார் பாசுரக் கருத்தை இது நமக்கு நினைவூட்டுகிறது. திருமங்கை ஆழ்வாருக்கென தனிக் கோயில் ஒன்று அமைந்துள்ளதும் இத்தலத்தின் சிறப்பாகும்.

கோயில் நிருவாகம்

இக்கோயிலுக்கு உரியனவாக சுமார் 35 வேலி நன்செய் நிலமும், 5 வேலி புன்செய் நிலமும் உள்ளன. இவற்றின் மூலம் கோயிலுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 50,000 வருவாயுண்டு.

மூன்று தர்மகர்த்தர்களும், இந்து அறநிலையத் துறையால் நியமிக்கப்பட்டுள்ள நிருவாக அதிகாரி ஒருவரும் கோயிலைத் திறம்பட நிருவகித்து வருகின்றனர். தற்போது ஸ்ரீ N. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் மானேஜிங் டிரஸ்டியாகவும், டாக்டர் ஸ்ரீ V. வரதாச்சாரியார் அவர்களும் ஸ்ரீ N. இராகவன் அவர்களும் டிரஸ்டிகளாகவும் இருந்து வருகின்றனர். நிருவாக அதிகாரியாக ஸ்ரீ M. S. சண்முகம் அவர்கள் பணியாற்றி வருகிறார்.

பிரபந்தப் பாசுரங்கள்

தேரழுந்தூரில் எழுந்தருளியுள்ள தேவாதிராஜன் அல்லது ஆமருவியப்பனைப் பற்றி நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் காணப்படும் பாசுரங்கள் இப்பகுதியில் தரப்பட்டுள்ளன. இவை யாவும் திருமங்கையாழ்வார் அருளிச் செய்தவை.



ஸ்ரீ ஆமருவியப்பன் பக்கத்து நாச்சியாருடன் விதிஉலாக் காட்சி.

பெரிய திருமொழி 7-ம் பத்து 5-ம் திருமொழி

திருவழுந்தூர்: ஆமருவியப்பன் விஷயம்
சௌராஷ்டிர ராகம் — அடதாளம்

தந்தைகாலில் பெருவிலங்கு தாளவிழ நள்ளிருட்கண்
வந்தஎந்தை பெருமானுர் மருவிநின்ற ஊர்போலும்
முந்திவானம் மழைபொழிய மூவாவுருவின் மறையாளர்
அந்திமூன்றும் அனலோம்பும் அணியார்வீதி அழுந்தூரே. 1

பாரித்தெழுந்த படைமன்னர் தம்மைமாள பாரதத்துத்
தேரில்பாகனாய் ஊர்ந்த தேவதேவன் ஊர்போலும்
நீரில்பணைத்த நெடுவாளைக்கு அஞ்சிப்போன குருகினங்கள்
ஆரல்கவுளோடு அருகணையும் அணியார்வயல்சூழ்
அழுந்தூரே. 2

செம்பொன்மதில்சூழ் தென்னிலங்கைக்கு இறைவன்
சிரங்கள் ஐயிரண்டும்
உம்பர்வாளிக்கு இலக்காக உதிர்த்தஉரவோன்
ஊர்போலும்
கொம்பிலார்ந்தமாதவிமேல் கோதிமேய்ந்த வண்டினங்கள்
அம்பராவும் கண்மடவார் ஐம்பாலணையும் அழுந்தூரே. 3

வெள்ளத்துள் ஓராலிலைமேல் மேவிஅடியேன்
மனம்புகுந்தென்
உள்ளத்துள்ளும் கண்ணுள்ளும் நின்றார்நின்ற
ஊர்போலும்
புள்ளுப்பிள்ளைக்கு இரைதேடிப் போனகாதல்
பெடையோடும்
அள்ளல்செறுவில் கயல்நாடும் அணியார்வயல்சூழ்
அழுந்தூரே. 4

பகலும்இரவும்தானேயாய்ப் பாரும்விண்ணும் தானேயாய்
நிகரில்சுடராய் இருளாகி நின்றார்நின்ற ஊர்போலும்
துகிலின்கொடியும் தேர்த்துகளும் துன்னிமாதர்
கூந்தல்வாய்
அகிலின் புகையால் முகிலேய்க்கும் அணியார்வீதி
அழுந்தூரே. 5

ஏடிலங்கு தாமரைபோல் செவ்வாய்முறுவல் செய்தருளி
மாடுவந்து என்மனம்புகுந்து நின்றார்நின்ற ஊர்போலும்
நீடுமாடத் தனிச்சூலம் போழ்கக் கொண்டல் துளிதூவ
ஆடலரவத்து ஆர்ப்புஒவா அணியார்வீதி அழுந்தூரே. 6

மாலைப்புகுந்து மலரணைமேல்வைகி அடியேன்மனம்
புகுந்துஎன்
நீலக்கண்கள் பனிமல்க நின்றார்நின்ற ஊர்போலும்
வேலைக்கடல்போல் நெடுவீதி விண்தோய்சுதை
வெண்மணிமாடத்
தாலைப்புகையால் அழற்கதிரை மறைக்கும்வீதி
அழுந்தூரே. 7

வஞ்சிமருங்குல் இடைநோவ மணந்துநின்ற கனவகத்தென்
நெஞ்சுநிறையக் கைகூப்பி நின்றார்நின்ற ஊர்போலும்
பஞ்சியன்ன மெல்லடிநற் பாவைமார்கள் ஆடகத்தின்
அஞ்சிலம்பின் ஆர்ப்புஓவா அணியார்வீதி அழுந்தூரே. 8

என்னைம்புலனும் எழிலும்கொண்டு இங்கேநெருநல்
எழுந்தருளி
பொன்னங்கலைகள் மெலிவேய்தப் போனபுனிதர்
ஊர்போலும்
மன்னுமுதுநீர் அரவிந்தமலர்மேல் வரிவண்டு இசைபாட
அன்னம்பெடையோடுஉடனாடும் அணியார்வயல்சூழ்
அழுந்தூரே. 9

நெல்லிக்குவளைக் கண்காட்ட நீரில் குமுதம் வாய்காட்ட
அல்லிக்கமலம் முகங்காட்டும் கழனி அழுந்தூர் நின்றானை
வல்லிப் பொதும்பில் குயில்கூவும் மங்கைவேந்தன்
பரகாலன்
சொல்லில் பொலிந்த தமிழ்மாலை சொல்லப்பாவம்
நில்லாவே. 10

பெரிய திருமொழி 7-ம் பத்து 6-ம் திருமொழி

திருவழுந்தூர் : ஆமருவியப்பன் விஷயம்
மத்யமாவதி ராகம் — ரூபக தாளம்,

(1) சிங்கமதாய் அவுணன்திறல் ஆகம்முன் கீண்டுகந்த
சங்கமிடத் தானைத்தழல் ஆழிவலத் தானை
செங்கமலத்து அயனனையார் தென்னழுந்தையில்
மன்னிநின்ற
அங்கமலக் கண்ணனை அடியேன்கண்டுகொண்டேனே

(2) கோவானார் மடியக் கொலையார்மழுக் கொண்டருளும்
மூவாவானவனை முழுநீர் வண்ணனை அடியார்க்கு
ஆ! ஆ! என்றிரங்கித் தென்னழுந்தையில் மன்னிநின்ற
தேவாதி தேவனையான் கண்டுகொண்டு திளைத்தேனே.

(3) உடையானை ஒலிநீர் உலகங்கள் படைத்தானை
விடையானோடு அன்று விறலாழி விசைத்தானை
அடையார் தென்னிலங்கை அழித்தானை
அணியழுந்தூர்
உடையானை அடியேன் அடைந்துய்ந்து போனேனே.

(4) குன்றால்மாரி தடுத்தவனைக் குலவேழம் அன்று
பொன்றுமை அதனுக்கு அருள்செய்த போரேற்றை
அன்றுவின் நறுநெய் அமர்ந்துண்ண அணியழுந்தூர்
நின்றானை அடியேன் கண்டுகொண்டு நிறைந்தேனே.

(5) கஞ்சனைக் காய்ந்தானைக் கண்ணமங்கையுள் நின்றானை
வஞ்சனைப் பேய்முலையூடு உயிர்வாய்மடுத் துண்டானை
செஞ்சொல் நான்மறையோர் தென்னழுந்தையில்
மன்னிநின்ற
அஞ்சனக் குன்றந்தன்னை அடியேன் கண்டு
கொண்டேனே.

(6) பெரியானை அமரர் தலைவற்கும் பிரமனுக்கும்
உரியானை உகந்தான் அவனுக்கும் உணர்வதனுக்கு
அரியானை அழுந்தூர் மறையோர்கள் அடிபணியும்
கரியானை அடியேன் கண்டுகொண்டு களித்தேன்.

(7) திருவாழ் மார்பன் தன்னைத் திசைமண் நீர் எரிமுதலா
வருவாய் நின்றவனை ஒலிசேரும் மாருதத்தை
அருவாய் நின்றவனைத் தென்னழுந்தையில் மன்னி
நின்ற
கருவார் கற்பகத்தைக் கண்டுகொண்டு களித்தேனே.

(8) நிலைபாளாக என்னை யுகந்தானை நிலமகள் தன்
முலையாள் வித்தகனை முதுநான்மறை வீதிதொறும்
அலையாரும் கடல்போல்முழங்கும் தென்னழுந்தையில்
மன்னிநின்ற
கலையார் சொற்பொருளைக் கண்டுகொண்டு
களித்தேனே.

(9) பேரானைக் குடந்தைப் பெருமானை இலங்கொளிசேர்
வாரார் வனமுலையாள் மலர்மங்கை நாயகனை
ஆரா இன்னமுதைத் தென்னழுந்தையில் மன்னிநின்ற
காரார் கருமுகிலைக் கண்டுகொண்டு களித்தேனே.

(10) திறல்முருகன் அனையார் தென்னழுந்தையில்
மன்னிநின்ற
அறல்முதல்வன் அவனை அணியாலியர் கோன்மருவார்
இறைநெடுவேல்வலவன் கலிகன்றிசொல்லையிரண்டும்
முறைவழு வாமைவல்லார் முழுதாள்வர் வானுலகே.

பெரியதிருமொழி 7ம் பத்து 7ம் திருமொழி

திருவழுந்தூர் : ஆமருவியப்பன் விஷயம்

செஞ்சுருட்டி ராகம் — ரூபகதாளம்

(1) திருவுக்கும் திருவாகிய செல்வா!
தெய்வத்துக் கரசே! செய்யகண்ணா!
உருவச்செஞ் சுடராழி வல்லானே!
உலகுண்ட ஒருவா; திருமார்பா!
ஒருவற்காற்றி உய்யும் வகையின்றால்
உடனின்று ஐவரென்னுள் புகுந்தொழியாது
அருவித் தின்றிட அஞ்சி நின்னடைந்தேன்
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!

(2) பந்தார்மெல் விரல்நல் வளைத்தோளி
பாவைபூ மகள் தன்னொடும் உடனே
வந்தாய்என் மனத்தே மன்னிநின்றாய்
மால்வண்ணா மழைபோல் ஒளிவண்ணா!
சந்தோகா! பௌழியா தைத்திரியா!
சாம வேதியனே! நெடுமாலே!
அந்தோ! நின்னடியன்றி மற்றறியேன்
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!

(3) நெய்யார் ஆழியும் சங்கமும் ஏந்தும்
நீண்டதோள் உடையாய்! அடியேனைச்
செய்யாத உலகத்திடைச் செய்தாய்
சிறுமைக்கும் பெருமைக்கும் உள்புகுந்து
பொய்யால் ஐவரென் மெய்குடியேறிப்
போற்றி வாழ்வதற்கு அஞ்சி நின்னடைந்தேன்
ஐயா! நின்னடியன்றி மற்றறியேன்
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!

(4) பரனே! பஞ்சவன் பௌழியன் சோழன்
பார்மன்னர் மன்னர்தாம் பணிந்தேத்தும்
வரனே! மாதவனே! மதிசூதா!
மற்றோர்நல் துணைநின்னலால் இலேன்காண
நரனே! நாரணனே! திருநறையூர் நம்பீ!
எம்பெருமான்! உம்பராளும்
அரனே! ஆதிவராகம் முன்னானாய்!
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!

(5) விண்டான் விண்புக வெஞ்சமத்து அரியாய்ப்
பரியோன் மார்வகம்பற்றிப் பிளந்து
பண்டு ஆனுய்யஓர் மால்வரையேந்தும்
பண்பாளா! பரனே! பவித்திரனே!
கண்டேன்நான் கலியுகத்து அதன் தன்மை
கருமமாவதும் என்தனக்கு அறிந்தேன்
அண்டா! நின்னடியன்றி மற்றறியேன்
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!

(6) தோயாவின் தயிர்நெய் அமுதுண்ணச்
சொன்னார் சொல்லிநகும் பரிசேபெற்ற
தாயால் ஆப்புண்டிருந்து அழுதேங்கும்
தாடாளா! தரையோர்க்கும் விண்ணோர்க்கும்
சேயாய்! கிரேத திரேத துவாபர
கலியுகம் இவைநான்குக்கும் முன்னானாய்!
ஆயா! நின்னடியன்றி மற்றறியேன்
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!

(7) கறுத்துக் கஞ்சனை அஞ்சமுனிந்தாய்!
கார்வண்ணா! கடல்போல் ஒளிவண்ணா!
இறுத்திட்டான் விடையேழும் முன்வென்றாய்!
எந்தாய்! அந்தரமேழும் முன்னானாய்!
பொறுத்துக் கொண்டிருந்தால் பொறுக்கொணாப்
போகமே நுகர்வான் புகுந்தைவர்
அறுத்துத் தின்றிட அஞ்சி நின்னடைந்தேன்
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!

(8) நெடியோனே! கடியார் கலிநம்பீ!
நின்னையே நினைந்து இங்கு இருப்பேனை
கடியார் காளையர் ஐவர்புகுந்து
காவல்செய்த அக்காவலைப் பிழைத்து
குடிபோந்து உன்னடிக்கீழ் வந்துபுகுந்தேன்
கூறைசோறு இவைதந் தெனக்கருளி
அடியேனைப் பணியாண்டுகொள் எந்தாய்!
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!

(9) கோவாய் ஐவர் என்மெய்குடியேறிக்
கூறை சோறிவை தாவென்றுகுமைத்துப்
போவார் நானவரைப் பொறுக்கிலேன்
புனிதா! புட்கொடியாய்! நெடுமாலே!
தீவாய் நாகணையில் துயில்வானே!
திருமாலே! இனிச்செய்வதொன்று அறியேன்!
ஆ! ஆ! என்றடியேற்கு இறை இரங்காய்
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே!

(10) அன்னமன்னு பைம்பூம்பொழில் சூழ்ந்த
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானை
கன்னிமன்னு திண்தோள் கலிகன்றி
ஆலிநாடன் மங்கைக் குலவேந்தன்
சொன்னவின் தமிழ்நன் மணிக் கோவை
தூயமாலை இவைபத்தும் வல்லார்
மன்னி மன்னவராய் உலகாண்டு
மானவெண் குடைக்கீழ் மகிழ்வாரே.

பெரியதிருமொழி 7ம் பத்து 8ம் திருமொழி

திருவழுந்தூர் : ஆமருவியப்பன் விஷயம்

பியாகடை ராகம் — ஆதிதாளம்

(1) செங்கமலத் திருமகளும் புவியும்
செம்பொன் திருவடியிணைவருட முனிவரேத்த
வங்கமலி தடங்கலுள் அனந்தனென்னும்
வரியரவின் அணைத்துயின்ற மாயோன்காண்மின்
எங்குமலி நிறைபுகழ் நால்வேதம் ஐந்து
வேள்விகளும் கேள்விகளும் இயன்றதன்மை
அங்கமலத் தயனனையார் பயிலும் செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோவே.

(2) முன் இவ்வுலகேழும் இருள்மண்டி யுண்ண
முனிவரொடு தானவர்கள் திசைப்பவந்து
பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம்
பரிமுகமாய் அருளிய எம்பரமன் காண்மின்
செந்நெல் மலி கதிர்க் கவரி வீசச்
சங்கமவை முரலச் செங்கமல மலரையேறி
அன்னம்மலி பேடையோடும் அமரும் செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோவே.

(3) குலத்தலைய மதவேழம் பொய்கைபுக்குக்
கோள்முதலை பிடிக்க அதற்கு அனுங்கிநின்று
நிலத்திகழும் மலர்ச்சுடரேய் சோதி! என்ன
நெஞ்சிடர் தீர்த்தருளிய என்நிமலன் காண்மின்
மதித்திகழ்சந்தகில் கனகமணியும் கொண்டு
வந்துந்தி வயல்கள்தோறும் மடைகள்பாய
அலைத்துவரும் பொன்னிவளம் பெருகும் செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோவே.

(4) சிலம்புமுதல் கலனணிந்தோர் செங்கண் குன்றம்
திகழ்ந்ததெனத் திருவுருவம் பன்றியாகி
இலங்கு புவிமடந்தை தனை இடந்து புல்கி
எயிற்றிடை வைத்தருளிய எம்மீசன் காண்மின்
புலம்புசிறை வண்டொலிப்பப் பூகம்தொக்க
பொழில்கள் தொறும் குயில்கூவ மயில்கள் ஆட
அலம்புதிரைப்புனல் புடைசூழ்ந்து அழகார் [செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோவே.

(5) சினமேவும் அடலரியின் உருவமாகித்
திறல்மேவும் இரணியனதாகம் கீண்டு
மனமேவு வஞ்சனையால் வந்தபேய்ச்சி
மாளஉயிர் வெளவிய எம்மாயோன் காண்மின்
இனமேவு வரிவளைக் கையேந்தும் கோவை
யேய்வாய் மரகதம் போல் கிளியின் இன்சொல்
அனமேவு நடைமடவார் பயிலும செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோவே.

(6) வானவர்தம் துயர்தீர வந்து தோன்றி
மாணுருவாய் மூவடி மாவலியை வேண்டி
தானமா ஏழுலகும் அளந்த வென்றித்
தனிமுதல் சக்கரப்படைஎன் தலைவன் காண்மின்
தேனமரும் பொழில்தழுவும் எழில்கொள்வீதிச்
செழுமாட மாளிகைகள் கூடந்தோறும்
ஆனதொல் சீர்மறையாளர் பயிலும் செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோவே.

(7) பந்தணைந்த மெல்விரலாள் சீதைக்காகிப்
பகலவன் மீதியங்காத இலங்கைவேந்தன்
அந்தமில் திண் கரஞ்சிரங்கள் புரண்டுவிழ
அடுகணையால் எய்துகந்த அம்மான் காண்மின்
செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்
திசைமுகன் அனையவர்கள் செம்மை மிக்க
அந்தணர்தம் ஆகுதியின் புகையார் செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோவே.

(8) கும்பமிகு மதவேழம் குலையக் கொம்பு
பறித்து மழவிடையடர்த்துக் குரவை கோத்து
வம்பவிழும் மலர்க் குழலாள் ஆய்ச்சிவைத்த
தயிர் வெண்ணெய் உண்டு உகந்த மாயோன்
[காண்மின்
செம்பவள மரகதம் நன்முத்தம் காட்டத்
திகழ்பூகம் கதலி பலவளம் மிக்குளங்கும்
அம்பொன்மதில் பொழில்புடை சூழ்ந்து அழகார்
[செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோவே.

(9) ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும்
ஒண்கரியும் உருள் சகடும் உடையச்செற்ற
நீடேறு பெருவலித் தோளுடைய வென்றி
நிலவுபுகழ் நேமியங்கை நெடியோன் காண்மின்
சேடேறு பொழில்தழுவும் எழில்கொள் வீதித்
திருவிழவில் மணியணிந்த திண்ணைதோறும்
ஆடேறு மலர்க்குழலார் பயிலும் செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோவே.

(10) பன்றியாய் மீனாகி அரியாய்ப் பாரைப்
படைத்துக் காத்து உண்டு உமிழ்ந்த
[பரமன் தன்னை
அன்று அமரர்க்கு அதிபதியும் அயனும் சேயும்
அடிபணிய அணியழுந்தூர் நின்ற கோவை
கன்றிநெடுவேல் வலவன் ஆலிநாடன்
கலிகன்றியொலி செய்த இன்பப்பாடல்
ஒன்றினொடு நான்கும் ஓரைந்தும் வல்லார்
ஒலிகடல்சூழ் உலகாளும் உம்பர்தாமே.

திருநெடுந்தாண்டகம் 15ம் பாசுரம்

ஸாவேரி ராகம் - ரூபகதாளம்

கல்லுயர்ந்த நெடுமதில்சூழ் கச்சிமேய
களிறு! என்றும் கடல்கிடந்த கனியே! என்றும்

அல்லியம்பூ மலர்ப்பொய்கைப் பழனவேலி
அணியழுந்தூர் நின்றுகந்த அம்மான்! என்றும்
சொல்லுயர்ந்த நெடுவீணை முலைமேல் தாங்கித்
தூமுறுவல் நகைஇறையே தோன்ற நக்கு
மெல்விரல்கள் சிவப்பெய்தத் தடவிஆங்கே
மென்கிளிபோல் மிகமிழற்றும் என்பேதையே.

திருநெடுந்தாண்டகம் 26ம் பாசுரம்

கேதாரகௌள ராகம் — ரூபகதாளம்

தேமருவு பொழிலிடத்து மலர்ந்த போதைத்
தேனதனை வாய்மடுத்துன் பெடையும்நீயும்
பூமருவி இனிது அமர்ந்து பொறியில் ஆர்ந்த
அறுகால் சிறுவண்டே! தொழுதேன் உன்னை
ஆமருவி நிரைமேய்த்த அமரர் கோமான்
அணியழுந்தூர் நின்றானுக்கு இன்றேசென்று
நீமருவி அஞ்சாதே நின்றோர் மாது
நின்நயந்தாள் என்றிறையே இயம்பிக்காணே.

பெரியதிருமொழி 6ம் பத்து 6ம் திருமொழி

9ம் பாசுரம்

தர்பார் ராகம் — ஆதிதாளம்

தாராளன் தண்ணரங்க வாளன் பூமேல்
தனியாளன் முனியாளர் ஏத்தநின்ற
பேராளன் ஆயிரம் பேருடையவாளன்
பின்னைக்கு மணவாளன் பெருமைகேட்டீர்
பாராளர் அவர்இவர்என்று அழுந்தைஏற்ற
படைமன்னர் உடல்துணியப் பரிமா உய்த்த
தேராளன் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே.

பெரியதிருமொழி 10ம் பத்து 1ம் திருமொழி

7ம் பாசுரம்.

தர்பார் ராகம் — அடதாளம்

கூந்த லார்மகிழ் கோவலனாய் வெண்ணெய்
மாந்து அழுந்தையிற் கண்டுமகிழ்ந்து போய்
பாந்தட் பாழியில் பள்ளி விரும்பிய
வேந்தனைச் சென்று காண்டும் வெஃகாவுளே.

பெரிய திருமடல் 123-ம் பாட்டு


பின்னு முலையுண்ட பிள்ளையை – அள்ளல்வாய்
அன்னம் இரை தேரழுந்தூர் எழுஞ்சுடரை

சிறியதிருமடல் 72-ம் பாட்டு

காரார் மணிநிறக் கண்ணனூர் விண்ணகரம்
சீரார் கணபுரம் சேறை திருவழுந்தூர்

திருக்கோயில் வரைபடம்

[350′ × 320′]



1. தர்ச புஷ்கர்ணி
2. ஊஞ்சல் மண்டபம்
3. கம்பர் சன்னிதி
4. அநுமார் சன்னிதி
5. வெளிச்சுற்று
6. ஆழ்வார் சன்னிதி
7. தாயார் சன்னிதி
8. திருவெண்ணாழி மண்டபம்
9. ஆண்டாள் சன்னிதி
10. பரமபத வாசல்
11. வாகன மண்டபம்
12. மகா மண்டபம்
13. இராமர் சன்னிதி
14. பெருமாள் சன்னிதி
15. யோக நரசிம்மர்
16. வாசுதேவர் சன்னிதி
17. பள்ளியறை
18. விஷ்வக்ஸேனர் சன்னிதி
19. தேசிகர் சன்னிதி
20. வசந்த மண்டபம்





காத்திடு கண்ணா.

கண்டு களிக்க கருணை புரிவாய்
கண்ணா உனதெழில் கருமேனியானே (கண்டு)

அண்ட முழுதும் அறமாம் அனைத்தும்
கண்ணா உனதருள் காட்சி யன்றோ (கண்டு)

உற்றிடும் அடியவர்க் குறுதுணை நீயன்றோ
குற்றுயிர் என்னையும் காத்திடு கண்ணா
கற்றவர் மற்றவர் களித்திடும் காட்சியாம்
பற்றெலாம் தீர்ந்தவர் பற்றிடும் உன்தாள் (கண்டு)

— "சித்ரா"

விலை: ரூ. 0·40 பைசா

விக்டோரியா (பவர்) பிரஸ், மாயூரம். போன் - 127